# நீதிநூல் காட்டும் நிலையில்லா செல்வமும் நிலையான அறமும்

*முனைவர் பி. விஜயராணி*
தமிழ்த்துறைத் தலைவர்
நா. க. இரா. அரசு மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783371

**ஆய்வுச்சுருக்கம்**

*செல்வம் நிலையில்லாதது. செல்லவம் இல்லாமல் வாழவும் முடியாது. என்றாலும் அறம் என்பதே என்று நிலையானது. வள்ளுவர் காட்டிய பாதையில் நிலையான வாழ்வு வாழ்ந்தால் அறம் நிலைக்கும். மனித வாழ்க்கைக்குத் தேவையான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் அனைவரும் உணருமாறு பாடியள்ளார். வள்ளுவரைத் தொடர்ந்து வந்த அற இலக்கியவாதிகளும் பிற்காலத்தில் தோன்றிய நீதிநூல்கள் மனித வாழ்க்கைக்குத் தேவையான அறக் கருத்துக்களைப் பேசியிருக்கின்றன. அந்நூல் பேசியுள்ள நிலையில்லா செல்வத்தைப் பற்றியும் அறத்தின் அவசியம் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*

## முன்னுரை

உலக வாழ்வில் செல்வம் என்பது நிலையில்லாதது. ஆனால் செல்வம் இல்லாமல் வாழவும் முடியாது. பேராசையில்லாமல் நல்வழியில் தேடும் செலவ்மே வாழும் காலத்தில் பயனையும், நிம்மதியையும் தரும். ஒருவரிடத்தில் மிகப்பெரிய அளவில் பொருள் குவிந்திருப்பது கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்று, ஆட்டம் முடிந்தவுடன் கூட்டம் களைவதைப்போல் செல்வமும் கரைந்து காணாமல் போய்விடும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அத்தகைய செல்வத்தை நேரிய வழியில் அறவோடு ஈட்டி குடிகாத்து வாழ்தலே மிகச்சிறந்த வாழ்க்கையாகும். இவையன்றி செல்வம் இருக்கின்ற நிலையில் அது நிலையானது என எண்ணி மனம்போன போக்கில் வாழ்ந்து அறத்தை இந்து நிற்றல் ஒவ்வொணுரு மனிதனுக்கும் மிகப்பெரிய இழிவாகும் என நீதிநூல்கள் உரைக்கின்றன. ஆகையால் முறையற்ற செலவ்ம், நிறைவைத் தருவதில்லை. மனித வாழ்வில் மிகப்பெரிய கேடினை விளைவிக்கும் என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மனிதனின் தேவையும் தேவையற்றவையும்

மனிதன் பசியில்லாமல் உண்பதற்கு மூன்று வேளை உணவும், உடுப்பதற்கு உடையும், இருப்பதற்கு ஓர் இடமும் இருந்தல் போதும். இதைத்தான் ஞானியர்களும் முனிவர்களும் வலியுறுத்துகின்றனர். மனிதனுக்குப் போதுமென்ற மனம் எப்பொழுது வருகின்றதோ அப்பொழுது தான் அறம் நிலைபெறும். வாழ்வின் அர்த்தம் பொருள் பெறுந்ததாக இருக்கும். மனிதனுக்கு எது தேவை, தேவையற்றவை என்பதை அறநூல் நமது ஔவைப்பாட்டி மிகச்சிறப்பாகப் பகுத்துக் காட்டுகின்றார். மனிதர்கள் உண்பதற்கு தீ தேவையானது நாழியளவு அரிசியும், அணிவதற்கு நான்குமுடி ஆடையும் போதும், மனிதனின் தேவை இவ்வளவு சிறியதாக இருக்க, அறிவுக்கண் இல்லாத இந்த மானுட கூட்டமோ ஆசையின்பாற்பட்டு பொருள்தேடும் மயக்கத்தில் தான் இறக்கும்வரை சஞ்சலத்தை உருவாக்கி துன்பத்திலே உழன்று இறந்தும் விடுகின்றனர் என கூறுகினறார். இதனை.

***உண்பது நாழிஉடுப்பனுது நான்குமுடிப்***
***எண்பது கோடிநிறைந்(து) எண்ணுவன - கண்புதைந்த***
***மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின்கலம்போலச்***
***சாந்தணையும் சஞ்சலமேதான்***

*என தாம் இயற்றிய நல்வழியில் பாடியுள்ளனர்.*

ணுபராசையின் விளைவால் செல்வம் மிகுதியாக இருக்க வேண்டும் என எண்பது கோடி எண்ணங்களை மனதில் நினைத்து அலைபவர்களின் வாழ்க்கை மண்ணால் செய்யப்பட்ட பாண்டம்போல் துன்பத்தையே கொடுக்கும் என தெளிவாக விளக்கிள்ளது குறிப்பிடத்தக்கது.

**அன்பில்லாதவன் செல்வம் அறத்தை ஈட்டாது**

அன்பில்லாதவரிடத்தில் உள்ள செல்வம் யாருக்கும் எப்பொழுதும் எந்தப் பயனையும் தராது. அறத்தைக் குலைத்து வாழ்வது வாழ்க்கையாகாது. தானும் அன்புகொண்டு பிறருடைய அன்பைத் தானும் பெற்றுத் தம்மிட் உள்ள பொருளை பிறருக்கு வாரி வழங்குகின்றவனே மிகச்சிறந்த மனிதன். மொழியறிவு இல்லாதவருக்கு பழமைவாய்ந்த சிறந்த நூலினால் பயனொன்றும் இல்லை. அதுபோல் தன் மனத்தில் அன்பில்லாமலும், பிறரிடத்தில் அன்பை செலுத்தாமலும் இருக்கும் ஒருவன் மிகப்பெரிய மாளிகையும், செல்வமும், பணியாட்களும் கொண்டு பிற வசதி வாய்ப்புகளோடு இருந்தாலும் அந்த வாழ்க்கை அவனுக்கு எந்தப் பயனையும் தருவதில்லை. இவ்வாழ்க்கைத் தேவையற்றது என்கிறார் ஔவையார். இதனை,

**இல்லானுக் கன்பிங் கிடம்பொன் ஏவல்மற்**
**றெல்லாம் இருந்தும் அவரிகென்செய்யும் - நல்லாய்**
**மொழியிலார்க் கேது முகநூல் தெரியும்**
**விழியிலாக் கேது விளக்கு**

என்ற பாடலில் விளித்துரைக்கின்றார். உலகத்தில் ஒருவன் எல்லா சிறப்பையும் பெற்று இன்புற்று வாழ்கிறாள் என்றால் அவன் எல்லோரிடத்திலும் அன்புடையவனாக, அறம்செய்பவனாக இருந்திருத்தல் வேண்டும் என வள்ளுவப்பெருந்தகை வாழ்வின் உண்மையினைக் கூறியுள்ளார். ஆகையால் இவருக்கு ஒரே கருத்தியல் உள்ளதை நம்மால் காணமுடிகிறது. இதனை,

**அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு**

என்ற குறள்வழி ஔவையும் நீதி நூலில் வள்ளுவர் உணர்த்துவதையே உரைக்கின்றார்.

**செல்வத்தின் செறுக்கும் சிதையும் மாண்பும்**

கொடுக்க மனில்லாதவனிடத்தில் உள்ள செல்வம் யாருக்கும் பயன்படாது. இவனின் செல்வத்திமிர் இவனையே அழித்துவிடும். நச்சுப்பொருள் போன்றதாகும். வள்ளுவர்,

**நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சு மரம்பழுத் தற்று (1008)**

என குறிப்பிடுகின்றார். அதாவது எவராலும் விரும்பப்படாதவன் செல்வம், ஊர் நடுவில் நச்சுமரம் பழுத்ததற்குச் சமம் என்று கூறுகின்றார்.

ஒருவனுக்கு மிகப்பெரிய அளவில் செல்வம் வந்து விட்டால் தெய்வத்தை வணங்கமாட்டர். தாம் பேசும் வார்த்தையின் தராதரம் அறிந்து பேசமாட்டான்.

உறவினரையும் நண்பனையும் மதிக்க மாட்டான். வெற்றிபெறுவத ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருப்பான். கொடிய பகைவர்களின் வலிமையையம் ஆராய்ந்துப் பார்க்கமாட்டான். வன்மையான ஊழ்வினையின் விளைவு தம்மையடைந்து தனது நிலை முற்றிலும் மாற்றிவிடும் என்பதையும் எண்ணிப் பார்க்கமாட்டான். இதனை, விவேக சிந்தாமணியில் வரும்,

**செல்வம் வந்துற்ற போது**
**தெய்வமும் சிறிது பேணார்**
**சொல்வதை அறிந்து சொல்லார்**
**...............................................**
**...............................................**
**வல்வினை விளைவும் பாரார்**
**மண்ணில்மேல்வாழும்மாந்தர்** (பா. 51)

என்னும் பாடல் வரிகள் மிகச்சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

**செல்வத்தைப்பிறருக்கு ஈயாதவன் அடையும் இழிவு**

தான் முறையற்ற வழியில் சேர்த்த செல்வத்தைப் பிறருக்கு ஈந்தாவது நன்மையத் தேக்கொள்ள வேண்டும். உள்ளத்தில் மலையளவு இரக்கம் இல்லை என்றாலும் கடுகளவாவது இருக்க வேண்டும். சேர்த்தப் பொருளை யாருக்கும் கொடுக்காமல் சேர்த்து வைக்கக் கடைசியில் தான்

*அனுபவிக்காமலே மரணித்துப் போவதுதான் மனிதவாழ்வில் நடக்கின்றது. வாழ்வின் நோக்கத்தை, வாழுபோது செய்யும் அறத்தின்பயனை, நிலையாமையைக் கொஞ்சமும் உணராதவர்களின் வாழ்வு மிகவும் இழிவும் அவலமும் நிறைந்ததாகவே அமையும் என்பதே உண்மை.*

*நீதி நூலாகிய விவேகசிந்தாமணியில் வாழ்வின் நெருக்கடியினால் தரித்திரமடைந்து வந்து யாசிப்பவர்களுக்குத்ம தம்மால் முடிந்த பொருளை ஈவதே மிக்க மேன்மைத்தருவதாகும். அப்படி கொடுத்து வாழ்பவர்கள் தமது வாழ்வில் பழுது ஏற்படாமல் சிறப்புடன் வாழ்வார். பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் இருப்பவனையும், கொடுப்பதைத் தடுப்பவனுக்கும் மிக அதிமான நோய்கள் உண்டாகி, உடுப்பதற்கு ஆடை இல்லாமலும் உண்பதற்கு உணவு இல்லாமலும் துன்பத்தில் உழன்று மாண்டுவிடுவார் என உரைக்கின்றது. இதனை,*

***இடுக்கினால் வறுமையாகி***
***ஏற்றவர்க்(கு) இசைந்த செல்வம்***
***கொடுப்பதே மிகவும் நன்று***
***குற்றமே இன்றி வாழ்வார்***
***..............................................***
***..............................................***
***உடுக்கவே உடையுமின்றி***
***உண்சோறும் அருமையாமே (பா. 66)***

*என்ற பாடல் வரிகள் எடுத்துரைப்பது எண்ணத்தக்கது.*

## உதவாதார் செல்வத்தையம் உதவச் செய்தல் பெரும்பேறு

*தம்மிடம் உள்ள செல்வத்தைப் பிறருக்கு ஒருவன் கொடுத்து உதவாதபோது வேறொருவன் அதனைப் பிறருக்கு உதவுமாறு செய்தல் அவனுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய புண்ணியப் பேராகும். மக்களுக்குக் குடிநீராகவோ பயிர்விளைச்சலுக்குப் பயன்படும் நீராகவோ உதவாத நீலக்கடலின் மேகமானது தான் போய் முகந்தெடுத்து அதை மழையாகப் பெய்து மக்களுக்கு உதவும். அதுபோல் பிறருக்கு உதவிசெய்யாத உலோபிகளிடமுள்ள பெரும் செல்வத்தைப் பிறருக்கு உதவுமாறு செய்தல் மிகப்பெரிய பேறு புண்ணியமாகும் என்பதனை துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நன்னெறியில் வரும்.*

***பிறர்க்குதவி செய்யா பெருஞ்செல்வம் வேறு***
***பிறர்க்குதவி ஆக்குபவர் பேறாம் - பிறர்க்துவி***
***செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து***
***பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு***

*பாடல் வரிகள் உணர்த்துகின்றன. ஆகையால் பொருளைத் தேடித்தேடி சேர்த்துவைத்து தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் முடிவில் இயற்துபோகின்ற மானிடரின் வாழ்வியலை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தும் வகையில்,*

***தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டா***
***தருமத்தை ஒருநாளும்ம மறக்க வேண்டா***

*என்ற உலநகாதனார் இயற்றிய உலகநீதியும் செல்வத்தின் பயனே பிறருக்கு கொடுத்து, ஈந்து வாழவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றது.*

## முடிவுரை

*அன்னைத் தமிழில் அழகுற அமைந்துள்ள நீதி நூல்கள் ஓர் மனிதனின் தேவையையும், ஈந்துவாழும் சிறப்பினையும், செல்வத்தின் செறுக்கைத்தீர்த்து அனைவரையும் செம்மையாக வாழ்செய்வதையும், முறையான வழியில் செல்வத்தை ஈட்டிய முறையான வாழ்க்கையை நிலையாத வாழ்வில் நிகழ்ந்த வேண்டும் என்பதையே இக்கட்டுரை மிகச்சிறப்பாக விளக்கியுரைக்கின்றது.*

## துணைநூற்பட்டியல்

1. *பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், (ச.வே.சு., உரை) மெய்ப்பன் பதிப்பகம், சென்னை. 2006.*
2. *திருக்குறள், (பரி மணக்குடவர் உரைகள்) கழக வெளியீடு, சென்னை. 1951.*
3. *கவிதாமணி, அ., அறமும் அறச்சிந்தனைகளும்,* NCBH, *சென்னை. 2013.*
4. *சுப்புரெட்டியார், ந., தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி-முறைமை, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை. 1988.*